செய்தி வெளியீடு எண்: 241 நாள்: 09.04.2018

## செய்தி வெளியீடு

### DEFEXPO – 2018 போக்குவரத்து மாறுதல் தொடர்பான பத்திரிக்கை செய்தி

DEFEXPO – 2018 என்ற இந்திய இராணுவ தளவாட கண்காட்சி வரும் 11.04.2018 முதல் 14.04.2018 வரை சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள திருவிடந்தை அருகில் நடைபெறவுள்ளது.

மேற்படி இராணுவ தளவாட கண்காட்சிக்கு அதிக எண்ணிக்கையில் வாகனங்கள் வரும் என எதிர்பார்க்கப்படுவதால் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காகவும், பாதுகாப்பு காரணங்களுக்காகவும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் 11.04.2018 முதல் 14.04.2018 வரை கீழ்கண்ட போக்குவரத்து மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

1. சென்னையில் இருந்து பாண்டிச்சேரிக்கு நேரடியாக செல்லும் வாகனங்கள் கிழக்கு கடற்கரைசாலையில் உள்ள அக்கரை சோதனைச் சாவடியிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலை வழியாகவும், கோவளம் சந்திப்பில் இருந்து கேளம்பாக்கம் இணைப்பு சாலை வழியாக பழைய மகாபலிபுரம் சாலையை அடைந்து திருப்போரூர் பூஞ்சேரி வழயாக பாண்டிச்சேரி செல்லலாம்.

2. பாண்டிச்சேரியிலிருந்து கிழக்கு கடற்கரைசாலை வழியாக சென்னை வரும் வாகனங்கள் வெங்கம்பாக்கத்தில் இருந்து GST வழியாகவும், பூஞ்சேரி சந்திப்பு வழியாக சென்னை செல்லலாம்.

3. சென்னையில் இருந்து பாண்டிச்சேரி, கடலூர், சிதம்பரம் ஆகிய ஊர்களுக்கு செல்லும் நீண்ட தூர பேருந்துகளும், மேற்படி ஊர்களிலிருந்து சென்னை வரும் பேருந்துகளும் காலை 07.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள பூஞ்சேரி முதல் கோவளம் சந்திப்பு வரை இயக்கப்படாமல் மேற்குறிப்பிட்ட மாற்று பாதையில் இயக்கப்படும்.

4. 12.04.2018 அன்று மட்டும் காலை 07.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை சென்னை – மகாபலிபுரம் மற்றும் மகாபலிபுரம் – சென்னை செல்லும் நகரப் பேருந்துகள் கோவளம் சந்திப்பு கேளம்பாக்கம் பூஞ்சேரி வரியாக இயக்கப்படும்.

5. 11.04.2018 முதல் 14.04.2018 வரை கண்காட்சிக்கு வர்த்தகம் தொடர்பாக சென்னையிலிருந்து வரும் வாகனங்கள் கோவளம் சந்திப்பு வழியாக அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள திருவிடந்தை வாகன நிறுத்தத்தை சென்றடையலாம். அதேபோல் மகாபலிபுரம் பகுதியிலிருந்து வரும் வர்த்தகம் தொடர்பான வாகனங்கள் பேரூர் சந்திப்பைத் தாண்டி கண்காட்சியின் பின்புறமுள்ள வாகன நிறுத்தங்களை வந்தடையலாம்.

**6. 14.04.2018 அன்று கண்காட்சியைக் காண வரும் பொது மக்கள் கோவளம் மற்றும் பேரூர் சந்திப்பு வழியாக கண்காட்சி திடலை அடைந்து இருசக்கரவாகனம், கார்களுக்கென ஒதுக்கப்பட்ட வாகன நிறுத்தத்தை வந்தடையலாம், அரசு பேருந்துகளின் மூலம் வருவோர் கண்காட்சிக்கு அருகில் உள்ள தற்காலிக பேருந்து நிலையத்திற்கு வந்தடையலாம்.**

**7. கண்காட்சி திடலை ஒட்டிய திருவிடந்தை, கோவளம், வடநெம்மேலி மற்றும் தெற்குப்பட்டு கிராம மக்களின் வாகனங்களும், பேருந்துகளும் சென்று வர சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுளள்து.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**